Kerala Gazette No. 22 dated 30th May, 2017.

**PART I** **Section iii**

## கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல்-பி) துறை

### அறிக்கை

*எண் 20053/ச. இ. பி. 2/2015/சட்டம்.* *திருவனந்தபுரம், 2016 ஜனவரி 9 / 1191 தனு 24/ 1937 பௌஷா 19.*

*2016 ஜனவரி மாதம் 9-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.*

*ஆளுநரின் ஆணைப்படி,*

*டி. சாஜு,*
*சிறப்புச்செயலர் (சட்டம்).*

*2016-ன் அவசரச்சட்டம் எண் 2*

## 2016-ன் கேரள நிலவரி (திருத்த) அவசரச்சட்டம்

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஆறாவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

*1961-ன் கேரள நிலவரி சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்குரிய ஒரு அவசரச்சட்டம்.*

*முகவுரை.—தற்போது, 2015-ன் (2015-ன் 16) கேரள நிலவரி சட்டம் (திருத்த) அவசரச்சட்டம், 2015-ம் ஆண்டு அக்டோபர் 3-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.*

தற்போது, எனவே மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தை திருத்தம் செய்வதற் கான ஒரு மசோதாவை, 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் நாள் துவங்கி 2015ஆம் ஆண்டு டிசம்பர் 17-ம் தேதி முடிவடைந்த கேரள சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில், மாநில அவையில் தாக்கல் செய்து ஒரு சட்டம் இயற்ற இயலாமல் போனதாலும்;

தற்போது, அதனால், இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் பிரிவு (2)-ன் உட்பிரிவு (எ)-ன்படி குறிப்பிட்ட அவசரச்சட்டம் 2016 ஜனவரி 11-ம் தேதி அமலிலிருந்து நின்று விடுவதாலும்;

மற்றும் தற்போது, மேற்குறிப்பிட்ட மசோதாவின் செயல்பாடுகளை நிலைபெறச் செய்யாவிட்டால் இடர்பாடுகள் ஏற்படுமென்பதாலும்;

மற்றும் தற்போது கேரள மாநில சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இல்லாததாலும், தாம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை தற்போது உள்ளது என்று கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, எனவே இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கை செய்யப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்தஅவசரச்சட்டம் 2016-ன் கேரள நிலவரி (திருத்த) அவசரச்சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) 2014 செப்டம்பர் 30-ம் தேதி இது அமலுக்கு வந்ததாக கருதப்பட வேண்டும்.

2. 1961-ன் 13-வது சட்டம் தற்காலிகமாக திருத்தம் செய்யப்படல்.—இந்த அவசரச்சட்டம் அமலில் இருக்கும் காலத்தில், 1961-ன் கேரள நிலவரி சட்டத்தில் (1961-ன் 13) (இதற்குப்பிறகு முதன்மைச்சட்டம் என்று குறிப்பிடப்படும்) பிரிவு 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு அமலில் இருக்கும்.

3. பிரிவு 6-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தின் பிரிவு 6-ல் துணைப் பிரிவு (1)-க்கு பதிலாக பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்படவேண்டும், அதாவது:—

"(1) பிரிவு 7-ன் துணைப்பிரிவு (2)-ன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பிரிவு 5-ன்படி சுமத்தப்பட்ட அடிப்படை ஆண்டு வரி விகிதம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

<u>அட்டவணை</u>

i. <u>பஞ்சாயத்து பகுதிகளுக்கு</u>

| | | |
|---|---|---|
| 8 ஆர் (Are) வரை | .. | ஆர் ஒன்றிற்கு (Are) ரூபாய் 1 |
| 2 ஹெக்டர் வரை | .. | ஆர் ஒன்றிற்கு (Are) ரூபாய் 2 |
| 2 ஹெக்டருக்கு மேல் | .. | ரூபாய் 400 அதனுடன் இரண்டு ஹெக்டருக்கு அதிகமான நிலத்திற்கு, கூடுதலாக ஒவ்வொரு ஆர் (Are)-க்கும் ரூபாய் 5-ம் சேர்த்து |

ii. <u>நகர பஞ்சாயத்து மற்றும் நகராட்சி மன்ற பகுதிகளுக்கு</u>

| | | |
|---|---|---|
| 3 ஆர் (Are) வரை | .. | ஆர் (Are) ஒன்றிற்கு ரூபாய் 2 |
| 2 ஹெக்டர் வரை | .. | ஆர் (Are) ஒன்றிற்கு ரூபாய் 4 |
| 2 ஹெக்டருக்கு மேல் | .. | ரூபாய் 800 அதனுடன் இரண்டு ஹெக்டருக்கு அதிகமான நிலத்திற்கு, கூடுதலாக ஒவ்வொரு ஆர் (Are)-க்கும் ரூபாய் 10-ம் சேர்த்து |

iii. <u>மாநகராட்சி பகுதிகளுக்கு</u>

| | | |
|---|---|---|
| 2 ஆர் (Are) வரை | .. | ஆர் (Are) ஒன்றிற்கு ரூபாய் 4 |
| 2 ஹெக்டர் வரை | .. | ஆர் (Are) ஒன்றிற்கு ரூபாய் 8 |
| 2 ஹெக்டருக்கு மேல் | .. | ரூபாய் 1600 உடன் இரண்டு ஹெக்டருக்கு அதிகமான நிலத்திற்கு, கூடுதலாக ஒவ்வொரு ஆர் (Are) ஒன்றுக்கு ரூபாய் 20-ம் சேர்த்து |

குறிப்பு:—2014 செப்டம்பர் 30-ம் தேதியோ அல்லது அதற்கு பிறகோ செலுத்தப் பட்ட அதிக அளவிலான வரி, வருங்காலத்தில் செலுத்த வேண்டிய நிலுவையில் சரி செய்யப்படும்.".

4. <u>இரத்து செய்தலும் பாதுகாப்பும்.</u>—(1) 2015-ன் (2015-ன் 16) கேரள நிலவரி சட்டம் (திருத்த) அவசரச்சட்டம் இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) இவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும், முதன்மை சட்டத்தின்படி மேற்குறிப்பிட்டபடி அவசரச்சட்டத்தினால் திருத்தப்பட்டதாக செய்யப்பட்ட எந்த ஒரு காரியம் அல்லது மேற்கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கையும் முதன்மைச்சட்டத்தின்படி இந்த அவசரச்சட்டத்தினால் திருத்தப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

பி. சதாசிவம்,

ஆளுநர்.